**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>**
**<u>எம்.சி.ஓ.பி.எண் 124/2023</u>**
**<u>நாள் 25/06/2025 புதன்கிழமை</u>**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – கூடுரு கிருஸ்ணையா | த/பெயர் – |
| வயது – 53 | தொழில் – |
| விலாசம் – பூதனம் கிராமம், நெல்லூர் மாவட்டம், ஆந்திர மாநிலம். | |

**<u>முதல் விசாரணை–</u>**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் ஏற்படுத்தப்பட்ட விபத்துக்கு 1 மற்றும் 2 ஆம் எதிர்மனுதாரர்களிடமிருந்து இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கு குறித்த விவரங்கள் அனைத்தும் பிரமான வாக்குமூலத்தின் வாயிலாக கூறியுள்ளேன். என் தரப்பு சான்றாவணமாக ம.சா ஆ 1 முதல் ம.சா ஆ 9 வரை குறியீடு செய்ய வேண்டுகிறேன். பொன்னேரி அரசு மருத்துவமனை மருத்துவ குழுவால் வழங்கப்பட்ட ஊன சான்றிதழில் எனக்கு 20 சதவிகிதம் ஊனம் என சான்றளிக்கப்பட்டுள்ளது. அந்த ஊனச்சான்றிதழ் **நீ.ம.சா ஆ 1** ஆகும். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

1. (1). முதல் தகவல் அறிக்கை **ம.சா ஆ 1** ஆகவும்,

   (2). பதிவு புத்தகம் நகல் **ம.சா ஆ 2** ஆகவும்,

   (3). காப்பீட்டு பாலிசி நகல் **ம.சா ஆ 3** ஆகவும்,

   (4). ஓட்டுநர் உாிமம் நகல் **ம.சா ஆ 4** ஆகவும்,

(5). விபத்து தகவலறிக்கை நகல் **ம.சா ஆ 5** ஆகவும்,

(6). ஆதார் அட்டை நகல் **ம.சா ஆ 6** ஆகவும்,

(7). மருத்துவ விடுவிப்பின் சுருக்கம் சான்றிட்ட நகல் **ம.சா ஆ 7** ஆகவும்,

(8). கதிரியக்கப்படம் மற்றும் அறிக்கை அசல் **ம.சா ஆ 8** ஆகவும்,

(9). குற்றப்பத்திரிக்கை நகல் **ம.சா ஆ 9** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

விபத்து கடந்த 18.12.2022ம் தேதி மதியம் சுமார் 2.00 மணியளவில் பூதனம் சுங்கசாவடி அருகே நடந்தது. நான் மோட்டார் சைக்களில் சென்றபோது விபத்து நடந்தது. நாங்கள் சென்ற வாகனத்தை ராகிபாட்டிகிருஸ்ணையா ஓட்டி செல்ல நான் பின்னால் அமர்ந்து சென்றேன். மேற்படி வாகனத்தில் நான், ராகிபாட்டிகிருஸ்ணையா மற்றும் சீனையா ஆகிய மூன்றுபோ் சென்றோம். அதில் சீனையா இறந்துவிட்டார். எங்கள் வானத்தின் மீது கார் மோதி விபத்து ஏற்ப்படுத்தியது. மேற்படி கார் முன்பக்கம் மோதி விபத்து நடந்தது. அந்த காரின் பதிவு எண் ஞாபகம் இல்லை. மேற்படி விபத்தில் எனது இடதுகால் தொடையில் எலும்பு முறிவு ஏற்ப்பட்டது. விபத்து நடந்தவுடன் நாராயணவனம் அரசு மருத்துவமனையில் 1 மாதத்திற்கு மேல் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். விபத்தானது 18.12.2022 தேதியில் நடந்ததாக கூறியுள்ள நிலையில் மருத்துவ விடுவிப்பு அறிக்கையில் 20.12.2022 சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் விபத்து நடந்த அன்றே மருத்துவமனையில் சேர்ந்துவிட்டேன்.

மேற்படி மருத்துவமனையில் எனக்கு இடது காலில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. தற்போது அந்த காலில் பொருத்தப்பட்ட தகடு தற்போதும் உள்ளது. விபத்து குறித்து யாா் புகார் கொடுத்தது என்றால் யார் கொடுத்தது என்று தெரியாது. முதல் தகவல் அறிக்கை ஒரு நாள் காலதாமதமாக பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த விபத்து குறித்து குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தேனா என்றால் இல்லை. நான் சென்ற வாகனத்தை ஓட்டி சென்ற ஓட்டுநருக்கு ஓட்டுநர் உாிமம் இல்லை என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி நாங்கள் சென்ற வாகனம் இரு சக்கர வாகனம் என்பதால் சட்ட விதிமுறைக்கு முரனாக மற்றும் காப்பீட்டு விதிமுறைக்கு முரனாக மூன்று பேர் பயணம் செய்ததாலும் அதனால் மேற்படி வாகனத்தை கட்டுப்படுத்த முடியாமல் ஓட்டி சென்று விபத்து ஏற்ப்படுத்தியுள்ளதாலும் 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தர கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனக்கு 51 வயது. நான் ரோடு சுத்தம் செய்யும் தொழில் செய்து வந்தேன். அதன் மூலம் எனக்கு மாதம் ரூபாய் 25,000,/- வருமானம் வந்தது. எனது வயது, தொழில், வருமானம் தொழில் குறித்து ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விபத்தானது ஓட்டுநர் உாிமம் இல்லாமலும் அதிக நபர்களை ஏற்றி சென்றதாலும் தான் ஏற்ப்பட்டுள்ளது என்றும் இந்த விபத்திற்கு முழு காரணம் நாங்க சென்ற வாகனம் தான் என்றால் சரியல்ல. எனவே 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தர கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளதால் மருத்துவ செலவுக்கான இழப்பீடு பெற உாிமை இல்லை என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் அதிக இழப்பீடு கேட்டுள்ளதால் நான் கோரியுள்ள இழப்பீடு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

எனக்கு ஏற்ப்பட்ட காயம் முழுவதும் குணமாகிவிட்டதாலும் எனக்கு தற்போது எந்தவித இயலாமையும் இல்லாததாலும் நான் கோரியுள்ள இழப்பீடு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**